[1973 ஆகஸ்ட் 11

Flats for Film Directors

* 94 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Housing Board has undertaken the construction of Housing flats for Film Directors at Kodambakkam in Madras City; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நடுத்தர வருமான தொகுதியினர்க்கான வீட்டு வசதி திட்டத்தின்கீழ் ரூபாய் 24.50 லட்சம் செலவில் சென்னை நகரில் கோடம்பாக்கத்தில் 68 இணைந்த வீடுகள் கட்டி தவணை முறையில் அளிக்கும் கருத்துருவுக்கு ஒப்புதல் அளித்திருக்கிறது. இந்த இணைந்த வீடுகள் தென்னிந்திய திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தின் உறுப்பினர்களில் வீட்டிற்கும் மனைக்குமான மொத்த மதிப்பில் கால்வாசித் தொகையை முன்பணமாகச் செலுத்த முன்வருபவர்களுக்குத் தரப்படும். ஒதுக்கீடு பெற்றவர்கள் மீதித் தொகையை வட்டியோடு 15 அல்லது 20 ஆண்டுகளில் செலுத்த வேண்டும். இதற்கான மாதத் தவணைகள் முறையே ரூ. 331, ரூ. 299 அளவில் இருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது.

Thiru N. DENNIS : Sir, they are all able to put up houses of their own and therefore the Government could concentrate more on providing houses for the less fortunate people.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, திரைப்பட இயக்குநர்கள் அநேகமாக லெஸ் பார்ச்சுனேட் என்ற வகையிலேதான் வருகிறார்கள்.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திரைப்பட இயக்குநர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். பொதுவாக கேள்வி கேட்டவரும் பதில் சொல்கிறவரும் சினிமாக்காரர்களின் தேவைபற்றி இன்னும் கொஞ்சம் தெரிந்து கொண்டால் தேவலை. சினிமா டைரக்டர்களும் நடிகர், நடிகைகளும் இவ்வாறு செய்யப்படுகிற திட்டத்தின்கீழ் வருவதில்லை. ஏதோ ஒரு சில ஏழை டைரக்டர்களுக்கு வேண்டுமானால் பயன்தரலாம். லைட் பாய்ஸ், டெக்னிஷியன்ஸ், சவுண்ட் எஞ்சினியர்ஸ் போன்றவர்களுக்கு இப்படிப்பட்ட வசதிகள் செய்து கொடுத்தால் நலமாக இருக்கும். மேலும், பல ஆயிரக்கணக்கான,

1973 ஆகஸ்ட் 11]

கோடிக்கணக்கான ரூபாய்களைப் போட்டுவிட்டு, அம்போ என்ற நிலையில் இருக்கும் என்னைப்போன்ற புரொட்யூசர்களுக்கு அவைகளைக் கொடுத்தால் வசதியாக இருக்கும். தமிழ்நாட்டில் ஒரு ' ஹாலிவுட்டை ' உண்டாக்கினல் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, திரைப்பட உற்பத்தி யாளர்களுடைய மனக்குறையைக் கேட்டீர்கள். அவர்கள் படம் பிடித்துக் கொண்டிருக்கிருர்கள். ஆகவே, அவர்களுக்கு லைட் பாய்ஸ் போன்றவர்களின் தயவு தேவை என்று கருதுகிறேன். லைட் பாய்ஸ் மற்றும் அங்குள்ள எல்லோ ருக்கும் வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கருதினலும், இயக்குநர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்னைச் சந்தித்துக் கேட்டார்கள். கோடம் பாக்கத்திலேயே, காலஞ்சென்ற நடிகர்களின் நிலங்களையும் வாங்கி அந்த இடத்திலே வீடு கட்டித் தாருங்கள் என்று கோரினுர்கள். அது அவர்களு டைய தொழிலுக்கும் பக்கமாக இருப்பதால் அந்த மனைகள் வாங்கப்பட்டு வீடுகள் கட்டப்படுகின்றன. அவர்களிலே எல்லா இயக்குநர்களும், பலர் கருதிக்கொண்டு இருப்பதைப்போல பல படங்களைத் தயாரிப்பவர்கள் இல்லை. அவ்வப்போது சான்ஸ் கிடைக்கும்பொழுது மட்டும் தயாரிப்பவர்கள். அவர்கள் அதிக வருவாய் உடையவர்கள் அல்லர்.

உற்பத்தியாளர்களைப்பற்றிச் சொன்னுர்கள். கொரட்டூரில் 81,000 ரூபாய்க்கு, 71,000 ரூபாய்க்கு பல திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. திரு. செழியன் அவர்கள் முன்பே விரும்பியிருக்க வேண்டும். காலங்கடந்து விரும்பியிருக்கிருர்கள். அடுத்த திட்டத்தில், அவர்கள் விரும்பினல் உற்பத்தி யாளர்களுக்கும், இலட்சக்கணக்கான விலை மதிப்புள்ள வீட்டு மனைகளை அதற் கான மொத்தத் தொகையையும் கொடுத்தால்—மொத்தத் தொகையையும் கொடுக்க வேண்டும்—வீடுகளைக் கட்டித் தரத் தயாராக இருக்கிறது.

சென்னை—தாமரைப்பாக்கம் பேருந்து வழித்தடம்

***95 வினு—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) திருவள்ளூர் வட்டம், தாமரைப்பாக்கம் இணைப்புச் சாலைக்கு. சென்னை உயர்நீதிமன்றத்திலிருந்து புதிய பேருந்துகள் விடும் திட்டத்தினை விரைந்து நிறைவேற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

(இ) இது எப்போது நிறைவேற்றப்படும் ?